**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. 102/2017<br>STC.<br>M.C. |
| Deposition of witness | : | PW.6 |
| Name | : | குணசேகரன் |
| Father's /Husband Name | : | தருமையன் |
| Village | : | தேவர்கண்டநல்லூர் |
| Taluk | : | திருவாரூர் |
| Caste | : | |
| Calling | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | 65 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 07th day November 2019

**முதல் விசாரணை.**

நான் தேவர்கண்டநல்லூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு அதம்பை தோப்பு தெருவில் வசித்து வந்தேன். தற்போது பணிநிமித்தமாக தேவர்கண்டநல்லூர் கிராமத்தில் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியும் 1வது எதிரி எனது தம்பி மனைவி 2வது எதிரி என் தம்பி , 3 மற்றும் 4வது எதிரிகள் அவர்களது குழந்தைகள். நானும் எனது தம்பிகளும் எங்கள் தெருவை சேர்ந்த அக்கா தங்கைகள் மல்லிகா, சரஸ்வதி, மணிமேகலை திருணம் செய்து தனித்தனியாக வசித்து வருகிறோம். 2009 ஆம் ஆண்டு அதம்பை தோப்பில் வசித்து வந்த என் மாமனார் சுப்பையன் என்பவர் இறந்துவிட்டார் அவர் இறந்தபிறகு அவருடைய சொத்துகளை அவருடைய 2வது மகள் சரஸ்வதியான ஆஜர் 1வது எதிரி தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து வந்தார். மல்லிகாவும், மணிமேகலையும் இது பற்றி கேட்டபோது பிரச்சனை செய்தார். இது சம்பந்தமாதக பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் மல்லிகாவும், மணிமேகலையும் வழக்கு தாக்கல் செய்தார்கள். 25.06.2014 அன்று முதல் நிலை தீர்ப்பாணையம் பிறப்பிக்கப்பட்டது அதில் ஆளுக்கு தலா 1 பங்கு என்று

ஆணை பிறப்பிக்கப்பட்டது அதன்படி சொத்துக்களை பிரிப்பதற்காக நீதிமன்ற ஆணையராக வழக்கறிஞர் தேன்மொழி நியமிக்கப்பட்டு பின்பு அவர் 20.02.2016 அன்று பட்டுக்கோட்டை தாலுகா அலுவலகம் மூலமாக நில அளவையர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோருடன் வந்திருந்தார்கள அப்போது காரைல 11.00 மணியளவில் நிலத்தை அளந்து இரண்டாவதாக வீடு இருக்கும் மனையை அளந்து விட்டு மூன்றவாது இடத்தை பார்வையிட்டு வீட்டிற்கு ஒரம் சாலைஓரத்தில் செல்வராஜ் என்பவர் வீட்டின் முன்பு 12.40 மணியளவில் நின்று நீதிமன்ற ஆணையர் மற்றும அங்கு வந்திருந்த நபர்களை பார்த்து கொண்டிருந்தபோது எதிரிகள் அனைவரும் அங்கு வந்து நேரடியாக நீதிமன்ற ஆணையரை பார்த்து 1வது எதிரி சரஸ்வதி யாரடி நீ தேவுடியா என் நிலத்தை எப்படி அளக்கலாம என்று கேடடார் அதற்கு ஆணையர் நீதிமன்ற உத்தரவுபடி நிலத்தை அளக்க வந்தேன் என்றார். என்ன உத்தரவு என்று கேட்டுக்கொண்டே ஆணையரின் கையிலிருந்து நீதிமன்ற ஆவணங்களை பிடித்து கிழத்துவிட்டு செல்போனில் பேசிகொண்டிருந்தார். அப்போது அவரது மகனும், மகளும் தகாத வார்த்தைகளால் ஆணையரை பார்த்து ஒன்னும் புடுங்கமுடியாது இந்த இடத்த விட்டு ஒடிவிடுங்கள் என்று பேசினார்கள். அப்போது 2வது எதிரி அறுவாளுடன் வந்த ஆணையரை பார்த்து இதற்கு மேல் இங்கிருந்தால் வெடடிவிடுவேன் என்று அறுவாளை காட்டி அச்சுறுத்தி பேசினார். உரத்த குரலில் சத்தம்போட்டு பேசினார். அப்போதும் 1வது எதிரி சரஸ்வதி செல்போனில் உரையாடிகொண்டிருந்தார். எங்களது வழக்கறிஞர் புலைமை வெங்கடாசலம் நீதிமன்ற ஆணைபடி அளக்க் வந்தவர்களை ஏன் இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டார் அதற்கு 2வது எதிரி எங்கள் வழக்கறிஞர் புலைமை வெங்கடாசலத்தை பார்த்து நீ யாராடா தேவுடியா மகனே என் நிலத்தை அளக்க என்று கேட்டு கட்டையை எடுத்து அடிக்க வந்தார். 1வது எதிரி சரஸ்வதி அங்கிருந்த அனைவரையும் மிரட்டினார். நீதிமன்ற ஆணையர் தன் வேலைகளை முடித்து விட்டு சர்வேயர் மற்றும் விஏஓ வை அழைத்து கொண்டு காவல்நிலையம் சென்றுவிட்டார். இது சம்பந்தமாக நீதிமன்ற ஆணையர் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>

போலிசா்ா விசாரித்தபோது அதம்பை தேர்பப்பு தெருவில் குடியிருப்பதாகவும் அங்கு எங்களுக்கு வீடு இருந்தாகவும் சொல்லவில்லை .நான் என்ன வேலை பார்த்து ஒய்வு பெற்றேன் அரசு கல்லூரியில் இளநிலை உதவியாளராக இருந்து ஒய்வு பெற்றேன் தற்போது எனக்கு வீடு வசிப்பிடம் எல்லாமே தேவர்கண்டநல்லூரில் தான் உள்து என்றால்சரிதான். 1வது எதிரி எனது மாமனாரின் சொத்துகளை அவரது பெயருக்க மாற்றம் செய்து கொண்டார் என்றுதான் வழக்கு தொடர்ந்தோம் என்றால்சரிதான். ஆணையர் வந்த சமயம் இங்கு பிறப்பிக்ப்பட்ட தீர்ப்பாணைக்கு தஞைச நீதிமன்றத்தல மேல் முறையீடு இருந்தது என்றால் தெரியாது. அளக்கும் சமயத்தில் 1வது எதிரி

தரப்பில் அவரோ வழக்கறிஞரோ இல்லை என்றால் சரிதான். 1வது எதிரியின் வழக்கறிஞர் ஏன் வரவில்லை என்றும் அவர் ஆணையரிடம் என்ன பதில் சொன்னார் என்ற விபரம் எனக்கு தெரியாது. 1, 2 வது இலக்க சொத்துகளை அளக்கும் போது எந்தபிரச்சனையும இல்லை என்றால் சரிதான். 3வது இலக்க சொத்தை அளக்க பேசிகொண்டிருந்தபோது தான் பிரச்சனை நடந்நதாக சொல்கிறேன் என்றால்சரிதான். பிரச்சனை நடந்தாக சொல்லப்படும் இடத்தல் நின்றிருந்த 20, 30 நபர்களில் பெயர், விலாசம் தெரியுமா என்றால் 4, 5 பேர்களை தெரியும். அந்த சொத்து பிரச்சனை தொடர்பாக 1வது எதிரி மற்றும் இன்னொரு சகோதரி குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்ததது என்றால் முன்விரோதம் இல்லை மனஸ்தாபம் தான். அந்தசமயத்தில் எங்களுக்கும் 1வது எதிரி குடூம்பத்திற்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால்சரிதான். சம்பவ இடத்திற்கு நான் எத்தனை மணிக்க வந்தேன் என்றால் காலை 10.30 மணிக்கு வந்தேன். நிலத்தை அளப்பதற்கான ஏற்பாடுகளை என்னுடைய தம்பி மகாலிங்கம் செய்தார் என்றால் சரியல்ல நாங்கள் தான் செய்தோம். சம்பவத்திற்கு முன்பு 3 மற்றும் 4வது எதிரிகள் எப்போது வந்தார்கள் என்றால் 12.40 மணியளவில் வந்தார்கள். நான் தற்போது பதிலளித்தபடி போலிசார் விசாரித்தபோது சொன்னேன் என்றால்சரிதான். சம்பவம் முடிந்து இரவு தான் ஊருக்கு சென்றோம். ஆணையர் புகார் கொடுத்த பின்பு போலிசார் விசாரித்தர்களா என்றால் 10 நாட்கள் கழித்து வந்து போலிசார் விசாரித்தார்கள். நாங்கள் எதார்த்தமாக வந்திருந்த சமயத்தில் தான் போலிசார் வந்து விசாரித்தார்கள். என்னை விசாரித்தது ஆய்வாளரா, உதவி ஆய்வாளரா என்றால் உதவி ஆய்வாளர் தான். எந்ததேதியில் விசாரித்தார்கள் என்றால் தேதி தெரியவில்லை மார்ச் மாத முதல்வாரத்தின் கடைசிநாளில் மாலை 04.00 மணியளவில் வந்து விசாரித்தார்கள். என்னை விசாரித்தபோது எங்கள் குடும்பத்தை சேர்ந்த நால்வரையும் விசாரித்தார்கள் . மற்ற யாரை விசாரித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. பிரச்சனைக்கு பிறகு சம்பவ இடத்தில் இருந்த தேக்கு மரங்களை வெட்டினேன் என்றால் எனக்கு சொந்தமாக இடத்தில் உள்ளது தான வெட்டினேன் அது சம்பநதமாக ஆஜர் எதிரிகள் என் மீது புகார் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக எனது வழக்கறிஞர் மீதும் எதிரிகள் புகார் கொடுத்தர்ாகள் என்றால் சரிதான். அந்த குற்ற வழக்கில் இருந்த தப்பிக்க நாங்களும் என் வழக்கறிஞரும் சேர்ந்து நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான். நீதிமன்ண ஆணையர் அதம்பை கிராமத்தைசேர்ந்தவர் என்றும் நானும் எங்களது வழக்கறிஞர்களும் சேர்ந்து மோசடியாக இந்த புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரிதான் . நான் சொல்வதுபோல நீதிமன்ற ஆணைர் கையில் இருந்து காகிதத்தை 1வது எதிரி பறித்து கிழிக்கவில்லை என்றும் அசிங்கமாக பேசவில்லை என்றால் சரியல்ல. 2, 3 மற்றும் 4வது எதிரிகள் காமகுரோதமாக பேசவில்லை என்றும் யாரையும் அச்சுறுத்தவில்லை என்றால் சரியல்ல. 3 மற்றும் 4வது எதிரிகள் நான் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. நானும் எனது மனைவி, தம்பி, தம்பி மனைவி, வழக்கறிஞர், நீதிமன்ற ஆணையர் ஆகியோர் சேர்ந்து

எங்கள் செல்வாக்கை பயன்படுத்தி காவல்நிலையம் சென்று பொய்யாக இந்த புகாரை கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/- எஸ்.முத்துமுருகன்,
நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. 102/2017<br>STC.<br>M.C. |
| Deposition of witness | : | PW.7 |
| Name | : | மகாலிங்கம் |
| Father's /Husband Name | : | தருமையன் |
| Village | : | அதம்பை |
| Taluk | : | பட்டுக்கோட்டை |
| Caste | : | |
| Calling | : | இந்தியன் |
| Religion | : | இந்து |
| Age | : | 52 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 07th day November 2019

**முதல் விசாரணை.**

நான் அதம்பை கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1வது எதிரி சரஸ்வதி என் அண்ணன் மனைவி. இரண்டாவது எதிரி ராசு எனது அண்ணன். 3,4 எதிரிகள் அவருடைய குழந்தைகள். என்னுடன் உடன் பிறந்தவர்கள் என்னுடைய இரண்டு பேர், எனது மூத்த அண்ணன் குணசேகரன், இரண்டாவது அண்ணன் இந்த வழக்கின் 2வது எதிரி ராசு. நாங்கள் மூவரும் எங்கள் தெருவை சேர்ந்த அக்கா, தங்கை, மல்லிகா, சரஸ்வதி, மணிமேகலை திருமணம் செய்து தனித்தனியாக குடும்பம் நடத்தி வருகிறோம். என்னுடைய மனைவி மற்றும் அவருடைய சகோதரிகளுக்கு இடையே பட்டுக்கோட்டை சிவில் நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு 2014ல் மூன்று பேருக்கும் பாகம் உண்டு என தீர்ப்பாகி விட்டது. அது சம்பந்தமாக நீதிமன்ற ஆணையர் தேன்மொழி இடத்தை அளப்பதற்காக 16.02.2016 அன்று அவருடன் எங்களுடைய வக்கீல் புலமை வெங்கடாசலம், சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் வந்தனர். 10.30 மணியளவில் வந்து இரண்டு இடத்தை பார்த்துவிட்டு சுமார் 12.30 மணியளவில் செல்வராசு என்பவர் வீட்டிற்கு அருகில் நின்றுகொண்டிருந்த போது என்னிடம் நால்வரும் வந்து கோர்ட்டில் கேஸ் நடக்கிறது இங்கு ஏன் வந்து அளக்கிறீர்கள் என்று நீதிமன்ற ஆணையரை திட்டிவிட்டு அவர் கையில் வைத்திருந்த பேப்பரை 1வது எதிரி சரஸ்வதி

பிடுங்கி அவர் கையில் எடுத்துபோய்விட்டார். 2வது எதிரி ராசு இங்கு யாரும் நிற்கக்கூடாது என்று அரிவாளை காட்டி மிரட்டினார். அப்போது எங்கள் வக்கீல் புலமை வெங்கடாசலம் கோர்ட் உத்தரவுபடி தான் வந்திருக்கிறோம் ஏன் தடுக்கிறீர்கள் என்று கேட்டார். அப்போது 3,4 எதிரிகள் எங்கள் வக்கீலையும், நீதிமன்ற ஆணையரையும் வாய்க்கு வந்தபடி திட்டினர். இது சம்பந்தமாக நீதிமன்ற ஆணையர் தேன்மொழி புகார் கொடுத்தார். வழக்கு சம்பந்தமாக போலீஸார் விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை</u>

அளக்கும் இடத்திற்கு ஊர்க்காரர்கள் எப்படி வந்தார்கள் என்றால் நான் தகவல் சொல்லி வந்தார்கள். 10,20 பேர் வந்தார்கள். நான் சொல்லும் தேதி நேரத்தில் தான் அளக்க வந்தார்கள் என்றால் சரிதான். 4வது எதிரி கார்த்திகா கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார் என்றால் சரிதான்.சுரேந்தர் வெளியூரில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான் அன்றைய தினம் ஊரில் இருந்தார். புகார் கொடுக்க போனபோது எங்கள் வழக்கறிஞர், ஆணையர்,சர்வேயர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் போனார்கள். போலீஸார் அன்றைய தினமே விசாரிக்கவில்லை. 10 நாட்கள் கழித்து தான் விசாரித்தார்கள். தேதி தெரியுமா என்றால் மார்ச் 10ம் தேதிக்கு பிறகு விசாரித்தார்கள். யார் என்னை விசாரித்தார்கள் என்றால் ஒரு பெண் காவலர் விசாரித்தார். அப்போது காலை 10.00 மணி இருக்கும். சம்பவ சமயத்தில் நாங்களும், எதிரிகளும் விரோதத்தின் காரணமாக பேசிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். அந்த சம்பவத்திற்கு முன்பாக தேக்குமரம் வெட்டியது தொடர்பாக பிரச்சனை என்றால் அது எங்களுக்கு சம்பந்தம் இல்லை நான் அப்போது வெளியூரில் வேலை பார்த்தேன். என்ன வேலை என்றால் டெய்லர் வேலை திருப்பூரில் பார்த்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் காலத்தில் நான் ஊரிலேயே இல்லை என்றும் திருப்பூரில் வேலை பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தை பற்றியோ, சம்பவம் நடந்த இடம் பற்றியோ தெரியாது என்றால் சரியல்ல. 16.02.2016ல் நான் சொல்வதுபோல எந்த சம்பவம் நடக்கவில்லை சொத்து பிரச்சனை பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/- எஸ்.முத்துமுருகன்,
நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.